அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 49/89(1)

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்—கொழும்பு.7
1990, மார்ச்சு 21 ஆந் தேதி.

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்
அரச கூட்டுத்தாபன தலைவர்களுக்கும்.

1987 ஜூலை/ஆகஸ்ட் வன்செயலின் போதும் அதன்பின்
இடம்பெற்ற பயங்கரவாத வன்செயலின் போதும் அவர்
களுக்குச் சொந்தமான வீடுகளும் சொத்துக்களும் சேத
மாக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட அரசாங்க உத்தி
யோகத்தர்களுக்கு நட்டஈடு அல்லது உதவி அல்லது
இரண்டும் வழங்குதல்.

89.10.09ஆம் தேதிய 49/89 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை கீழ்க்காணும் வகையில் திருத்தப்படுகிறது.

1. 5ஆம் பந்தியின் 8ஆம் வரியிலுள்ள 'அதிகாரமளிக்கப்பட்டிருத்தல்' என்னும் பதம் 'சான்றுப்படுத்தப்பட்டிருதல்' எனும்வாறு அமைதல்.

11. கீழ்க்காணும் மூன்று உபபந்திகளை சேர்த்தல். 5.1 திருப்திகரமான முறையில் உரிமை நிலைநாட்டப்பட்ட வதியும் வீடு, வீட்டுத்தளவாடங்கள், வாகனங்கள் என்பனை சம்பந்தமான விண்ணப்பங்களை மட்டுமே [illegible] படுத்தும் உத்தியோகத்தர் சான்றுப்படுத்துதல் வேண்டும்.

5.2. விண்ணப்பிக்கும் அரசாங்க உத்தியோகத்தருக்கு வருடாந்த சம்பள முற்பணமாக வழங்கப்படும் தொகையையும் அறவிடுதற்குள்ள தொகையையும் காட்டும் ஒரு சான்றிதழை சான்றுப்படுத்தும் உத்தி யோகத்தர் வழங்குதல் வேண்டும்.

5.3. சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரின் மாதிரிக் கையொப்ப மானது புனர்வாழ்வு புனரமைப்பு ராஜாங்க அமைச்சரின் செயலா ளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

111. 6ஆம் பந்தியை நீக்கிவிட்டு பின்வருவதைப் பதிலீடு செய்க.

6 எம் ஆர் ஆர்/ப/பி ஏ படிவத்தின் அட்டவணையுடன் விண்ணப்பத்தை சான்றுப்படுத்தும் ஆவணங்களின் மூலப் பிரதியுடன் விண்ணப்பதாரர் பணம் பெற்றுக் கொண்டதற்கு அத்தாட்சியாக கையொப்பமிட்ட சான்றுப் படுத்தப்பட்ட பற்றுச்சீட்டை புனர்வாழ்வு புனரமைப்பு ராஜாங்க அமைச்சரின் செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

1V. விண்ணப்ப பத்திரத்தில் 1ஆம் இலக்க விடயம் பின்வருமாறு அமையும்:

" 1 (அ) விண்ணப்பதாரரின் பெயரும்
உத்தியோக முகவரியும் ..................

(ஆ) பாதிக்கப்பட்ட உடைமைகள்
அமைந்துள்ள இடத்தின் முகவரி ..................

ஒப்பம்: பி.என்.எம். பெர்னாந்து.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.